(யாழ்ப்பாணம்)

# கருச் சிதைவு அதிகரிப்பு

வடபகுதியில் அண்மைக்காலமாக கர்ப்பிணிப் பெண்கள் கருச்சிதைவுக்குட்படுவது அதிகரித்து வருகின்றது.

நேற்று முன்தினம் யாழ். போதனா மருத்துவமனையில் மட்டும் 17 பெண்கள் இவ்வாறு கருச்சிதைவுக்குட்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

கருச்சிதைவுக்குட்படுவதன் காரணம் பற்றி எமது நிருபர் மருத்துவ மனையின் மருத்துவ அதிகாரிகளிடம் வினவிய போது போசாக்கின்மை, "ஒப்ரேசன்" போன்ற கர்ப்பிணிப் பெண்கள் உபயோகிக்கும் மருந்துப் பொருள்களில் தடைப்பாடு. சிறிலங்கா அரசின் ராணுவ மற்றும் விமானப் படையினரின் குண்டுத் தாக்குதல்கள். அரசின் பொருளாதாரத் தடை போன்ற பல வேறு காரணங்கள் கூறப்பட்டன. நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஏழு மாதங்களுக்குட்பட்ட கர்ப்பிணிப் பெண்களாகும் என்பதையும் இவர்கள் கடந்த வருடம் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதன் பின்னர் கருத்தரித்தவர்கள் என்பதையும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டி விளக்கம் அளித்தனர்.

(ச

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் இதழ்

நாதம்: 02 மார்ச் (20 - 03 - 1991) புதன்கிழமை ஓசை 30

## பெற்றோலிய பொருள்கள் கரை ஒதுங்கும்

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தின் விளைவாக எதிர்வரும் மே, ஜூன் மாதங்களில் இலங்கையின் மேற்கு கடற்கரைப்பகுதியில் பெற்றோலியப் பொருள்களின் திரட்சிதார் உருண்டைகள் போன்று வந்துசேர இடம் உண்டு என இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்க்கின்றது. மேலும் மீன்பிடித்துறை உல்லாசப் பிரயாணத்துறை என்பன இதனால் பாதிப்பு அடையும் ஏதுக்கள் பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இரு வேறு சம்பவங்களில்

# ஐந்து படை பலி!

# ஆயுதங்கள் மீட்பு

## இரண்டு புளொட் கால்களை இழந்தது

(நமது நிருபர்)

வவுனியா, திருக்கோணமலை மாவட்டங்களில் நடந்த இரு வேறு சம்பவங்களில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இராணுவத்தினரின் உடலங்கள் உட்பட பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன. இரு புளொட் உறுப்பினர் கால்களை இழந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பூந்தோட்டம் சிறிலங்கா இராணுவ காவல் அரணில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பல ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று நண்பகல் 12-30மணியளவில் பூந்தோட்டத்தில் உள்ள இராணுவத்தினர் சுமார் 500யார் வரை முன்னேறி வந்துகொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர்மீது கடும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் மூன்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மேஜர் ராஜித்

(மட்டக்களப்பு)

வாகரைப் பிரதேசப் பொறுப்பாளர் மேஜர் ராஜித் (செ. கணேசன், சித்தாண்டி) என்ற போராளி நேற்றுமுன்தினம் மிதிவெடியில் அகப்பட்டதில் வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## புளொட் காலை முறிந்தது

(செ. த. மை)

வவுனியாஊடாகச் செல்லும் லொறிகளை கூட்டி மிதிவெடிகள் உள்ள இடங்களில நிறுத்தும்படி புளொட் குழுவினரால் பணிக்கப்படுகின்றதாம்.

இப்படியாக நிறுத்திவைக்கப்பட்ட லொறி ஒன்று நேற்று முன்தினம் மிதி வெடியில் சிக்கி அதன் டயர்கள் வெடித்து சேதமான தாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து லொறி ஒன்றை நிறுத்தி வைக்க மறுத்த சாரதி ஒருவரின் காலை, கருணாலி பெல் ஒன்றினால் குறிப்பிட்ட குழுவைச்சேர்ந்தவர்கள் அடித்து முறித்தனர்.

## அழிவுகளை மதிப்பிட திருச்சபை உறுப்பினர்

(செ.த.மை)

சிறிலங்கா அரசின் முப்படைகளும், தமிழீழத்தில் மேற்கொண்டுள்ள அழிவு நடவடிக்கைகளை நேரில்பார்வையிட்டு அறிக்கை தயாரிப்பதற்கென உலக மெதடிஸ்த திருச்சபை உறுப்பினரும், ஜேர்மன் டோர்ட்மண்ட தேவாலயத்தின் பிரதிநிதியுமான செல்வி டொறத்தி மிக்கி யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். மெதடிஸ்த திருச்சபையின் ஏற்பாட்டில் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவந்த லொறி ஒன்றில் இவர் யாழ்ப்பாணம் வந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

### அத்தியாவசிய சேவைகளுக்கு

## ஓய்வுபெற்ற ஊழியரை மீண்டும் நியமிக்க முடிவு

(கொழும்பு)

கடந்த ஆண்டு பெருந்தொகையான ஊழியர்கள் ஓய்வுபெற்றுள்ளதன் விளைவாக அத்தியாவசிய சேவைகளுக்கு ஓய்வு பெற்றவர்களை மீண்டும் நியமிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அரசாங்க நிர்வாக சுற்று நிருபத்தின்படி பொருத்தமான மாற்று ஏற்பாடுகள் செய்யமுடியாதவிடத்து அத்தகைய ஊழியர்கள் தொடர்ந்தும் வேலை செய்ய வேண்டும் என்ற தவிர்க்கமுடியாத இடங்களில் ஓய்வுபெற்ற உத்

(4ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பிற்கு எரிபொருள்

## விநியோகஸ்தர்களை அனுப்பக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவருக்கு அக் கூட்டுத்தாபனத்தின் பிரதம சந்தைப்படுத்தும் முகாமையாளர் எரிபொருள் விநியோகஸ்தர்களை அனுப்பி வைக்கும்படி சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுகுறித்து யாழ் கூட்டுத்தாபன தலைவர் கூறுகையில் தாம் முதலில் கூட்டுறவுச் சங்கங்களை கேட்டுக்கொள்ள இருப்பதாக தெரிவித்தார். இதேவேளை யாழ் அரச அதிபரின் அனுமதிபெற்ற கூட்டுறவுச் சங்கங்களும், தனியார் எரிபொருள் வியாபாரிகளும் கொழும்பு சென்று எண்ணை எடுத்துவரும் சேவையை ஆரம்பித்துவிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (வோ)

## சிறிலங்கா பாராளுமன்றம் 'றபர் ஸ்ராம்ப்' ஆகியுள்ளது

### சிறிமாவோ

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றம் ஒரு றபர் ஸ்ராம்ப்போல் செயற்பட்டுவருவதாக எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

இதனிடையில்கடந்தபெப்ரவரி 21 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கலாட்டாவைத் தொடர்ந்து பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்த எதிர்க் கட்சிகள் பகிஷ்கரிப்பைக்கைவிடும் தீர்மானத்தை எடுத்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் கூறியுள்ளன.

### மகாபொலவிற்கு

## குருநாகல் வரும்படி மாணவருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களை மகாபொல புலமைப் பரிசிலை பெற்றுக்கொள்வதற்கு குருநாகலுக்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவிருக்கும் ஜனாதிபதியின் பரிசில் வழங்கும் நிகழ்ச்சியில் யாழ். வளாக மாணவர்களும் பரிசில்வாங்க இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பை வர்த்தக வணிக அமைச்சு விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை பல்கலைக்கழக வட்டாரங்களின் தகவலின்படி 490 வடபகுதி மாணவர்கள் உள்ளனர். (வோ)

## ரஞ்சனின் விசாரணைக்கு மக்களின் ஒத்துழைப்பில்லை

### – பொலிஸ் வட்டாரங்கள் கவலை

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் கொலை சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பூர்வாங்கவிசாரணைகள்நடாத்த முடியாத நிலையிலுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குண்டுவெடிப்புஇடம்பெற்ற பகுதியிலுள்ள மக்கள் விசாரணைகளை நடாத்துவதற்கு போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லையெனவும் விசாரணைகளை நடாத்திவரும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனால் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

மீண்டும் வெள்ளிமஞ்சரி

அநேக வாசகர்களின்வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் நாளை மறுதினம் "வெள்ளி மஞ்சரி" வெளிவருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## முத்தமிழ் விழா ஏற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவு ஒழுங்கு செய்துள்ள முத்தமிழ் விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளன.

ஏற்கனவே திட்டமிட்டபடி அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை குடாநாட்டின் பல பகுதிகளிலும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்காகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**தேவை**

பாவித்த ரீசப்போ, ஓடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், ரெவுலி டப்பா போல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்: எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். (B.2169)

**கொழும்பு ஸ்ருடியோ**

புளொக் (Block) புகைப்படம், நபர்சீல், கலர்படம்ஒளியம் பிறேம் போடுதல், கலர் பிலிம், கருள்கள், ஸ்ரிக்கேவி முதலியனவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (B - 2090)

**நியு வெஸ்ரோன் எலக்ரோனிக் கோப்**

ரீ வி, டெக், றேடியோ, மணிக்கூடு, நிவைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும். புதிய பழைய பாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும் ஓட்டு மடம் சந்தி, ஓட்டுமடம் யாழ்ப்பாணம். (B-2102)

---

## போக்குவரத்து காவலர்களுக்கான

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. முழுப்பெயர் :
2. விலாசம் :
3. வயதெல்லை : 18 தொடக்கம் 35 வரை 1-4-1991 அன்று 18 வயது நிரம்பியிருத்தல் வேண்டும்.
4. உயரம் ; 5 அடி 6 அங்குலம்
5. மார்பகலம் : 32 அங்குலம் மூச்சு வெளியேறிய நிலையில்:
6. கல்வி ; க. பொ த. (சா/த) தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
7. சாரணியம், முதலுதவிப்படை, விளையாட்டு போன்றவற்றில் பங்குபற்றியிருப்பின் விஷேட தகுதியாகக் கருதப்படும்.
8. யாழ் மாவட்டத்தில் எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.
9. உதவிப்பணம் வழங்கப்படும்.
10. விண்ணப்பங்களை 27-3-91 க்கு முதல் அல்லது அன்று கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கவும்.

(விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் )

போக்குவரத்துப் பிரிவு
சுன்னாகம்.

R/1190)

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்.
(வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்)

**G. A. Q --92**

பேராதனை பல்கலைக்கழக பதிவினை மேற் கொள்பவர் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளல்
இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

**B. A -- 91**

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன
SPOKEN ENGLISH WITH GRAMMAR
புதிய பிரிவு ஆரம்பம்
23. 3- 91 காலை 9 மணி

(B/2173)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்
01. 02. 1967

வீரமரணம்
17. 03. 1987

லெப்ரினன்ட்
கேதீஸ்

(விஜயானந்தன் ஜீவா)

வீர மறவனே!
நீ கொல்லப்பட்டாலும்
உனது இலட்சியம் வெல்லப்படும்!!

யாழ்ப்பாணம்.

சகோதரி
திருமதி அருளானந்தம்
உறவினர், நண்பர்கள்.

(B-2146)

---

## க. பொ. த. சாதாரண தரம்

# PRACTICE EXAM

# பயிற்சிப் பரீட்சை

1990 Dec. இல் நடைபெற்ற க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

- யாழ். குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ். மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.
- யாழ். மாநகரசபை எல்லை தவிர்ந்த குடாநாட்டில் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொண்டு அதனை ஒழுங்குசெய்யலாம்.
- கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப்பரீட்சை நடைபெறும்.
- 20—03—1991 இற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50-00 செலுத்துதல் வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.
- தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும். ஐந்து பாடத்துக்குமுரிய மொத்தப் புள்ளிகளில் அதிகூடுதலான கூட்டுத்தொகையை பெறுபவருக்கு தங்கப் பதக்கமும், ஒவ்வொரு பாடங்களிலும் கூடுதலான புள்ளியைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும்.

**Examination Unit**
**UNIVERSAL**
**Kantharmadam, JAFFNA.**

★★ பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத் துறையில் தமது அனுபவம், தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20. 03. 1991 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(B.2139)

---



## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 20

1985 ஆம் ஆண்டு கரவெட்டியில் வீரமரணமடைந்த
**ரசிந்தன்** (ப. கதிர்குமார், கரவெட்டி)

1986ஆம் ஆண்டு நெடுங்கேணியில் இடம் பெற்ற இராணுவ முற்றுகையின் போது கைக்குண்டால் தன்னைத்தானே அழித்துக் கொண்ட
**டொனா** (பா. போல்ராஜ், பாவற்குளம், வவுனியா)

1990 இல் எமைப்பிரிந்த
**ஜோன்சன்** (பா. சதீஸ்குமார், ஊறணி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மாவீரர்களே!
வீரத்தின் விளை நிலத்தில்
இருளைப் புதைப்பதற்கு
உங்களது காலடிச் சுவடுகளை
ஆழப்பதித்துச் சென்றீர்கள்!
உங்களது இலட்சியக் கனவு
மரணத்தோடு முடிவடைவதில்லை!
உங்களைத் தொடர்ந்து
இன்னும் இன்னும்
ஆயிரம் வீரர்கள்
உங்கள் பாதையில்
அணி திரள்வர்!
ஈழ மண்ணை மீட்பதற்கு
உங்கள் இலட்சியப் பாதையில்
வழி நடப்பர்!

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2150)

### ✱ சிந்தனைக்கு ✱

ஒவ்வொருவருடைய தொழிலும், பிறருக்குச் சேவை செய்வதே.

—லியோ டோல்ஸ்டாய்


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 20-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த: பெ. எண் 05


# வைத்திய கல்வியின் பயன் தாயகத்திற்குத் தேவை

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட இருபத்தியெட்டு பயிலுனர் மருத்துவர்களில் பதினெட்டுப் பேர் மட்டுமே சேவையாற்ற முன்வந்துள்ளார்கள். மிகுதிப்பத்துப் பேர் 'அசாதாரண நிலை'யைக் காரணம் காட்டி தென் இலங்கையில் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டம் இன்று தமது வைத்திய சேவைக்கு வைத்தியர் பற்றாக்குறையால் அல்லலுறுகின்றது. யாழ். குடா நாட்டில் வடமராட்சி கிழக்கு, தீவுப்பகுதி போன்ற கஷ்டப் பிரதேசங்களில் உள்ள வைத்திய சாலைகளில் நிரந்தர வைத்தியர்கள் இல்லை. இதனால், வைத்தியசாலைகள் தினமும் திறக்கப்படுவதில்லை. நகரப்பகுதிகளில பற்றாக்குறையான வைத்தியர்களுடன் தமது சேவையை வழங்கும் வைத்தியசாலைகள் அவற்றை விரிவு படுத்த முடியாது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

இத்தனைக்கும் யாழ். மாவட்டம் இலங்கையிலேயே அதிகளவு வைத்தியர்களை உற்பத்தி செய்த மாவட்டம். மாத்திரம் மாவட்டத்தின் ஒரு மூலையில் சேவை செய்வதற்குத் தயாராக இருந்த யாழ். வைத்தியர்கள் இன்று தமது மக்கள் இன்னலுறும் வேளையில் சேவை செய்வதற்குத் தயாராக இல்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். இந்த நிலையில் சேவை செய்பவர்கள் பாராட்டிற்குரியவர்கள்.

இப்பிரச்சினை கூர்மை அடைவதற்கு முன்னர் படித்துப்பட்டம் பெற்று 'சேவையாற்றியவர்கள்' நெருக்கடியின் போது ஓடிப்போய் விட்டார்கள். அதேபோல் நெருக்கடியின்போது படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் ஓடிப்போவதென்றால் அவர்கள் பெறும் கல்வியில் தவறு இருத்தல் வேண்டும். அல்லது வைத்தியக் கல்விக்குச் சென்றதும் அவர்களின் சிந்தனை ஓட்டத்தில் மாறுதல்கள் ஏற்படுதல் வேண்டும்.

மருத்துவக் கல்வியைப் பொறுத்து தாயக மண்ணுக்குச் சேவை செய்யக் கூடாது எனப் போதிப்பதாகத் தெரியவில்லை. மக்கள் எவராயினும் எங்காயினும் நோயினால் துன்பப்படும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இதற்குக் காலம், நேரம் கிடையாது என்றே மருத்துவக் கல்வியின் போது போதிக்கப்படுகின்றது.

இதை வலியுறுத்துவது போல் சான் வெளிநாடுகளில் வைத்தியர்கள் நடந்து கொள்கின்றார்கள். வளைகுடாவில் போர் நடைபெறும்போது ஈராக்கில் ஆயிரக் கணக்கான வைத்தியர்கள் சேவையாற்ற முன்வந்துள்ளார்கள். அதேபோன்று இங்கும் நோயினால் அல்லலுறும் தமிழ் மக்களுக்கு பல வெளிநாட்டு வைத்தியர்கள் கடமை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் வைத்திய கல்வி தாயக மண்ணிற்குச் சேவையை மறுக்கவில்லை.

மாறாக, பல்கலைக்கழகம் சென்றதும், மாணவர் அபிலாஷைகள்தான் மாறி விடுகின்றன. அங்கு சென்றபின் அவர்கள் இச் சமூகத்துடன் தம்மை இணைத்துப் பார்ப்பதற்குத் தயாராக இல்லை. இதற்கு சமூகத்தில் இவர்களுக்கு அளிக்கப்பட்ட அந்தஸ்தும் காரணமாகும். இதன் காரணமாகவே மக்கள் இன்னலுடன் தம்மை இணைத்துக் கொள்ள இவர்கள் தயாராகவில்லைப் போலும்.

வைத்தியர்களின் இந்த நடவடிக்கைகள் அவர்கள் தமது சமூகத்திற்குச் செய்யும் கடமையிலிருந்து தவறுவது மட்டுமல்ல; அவர்கள் தமது கல்விக்கும் கடமைக்கும் விளைவிக்கும் துரோகமும் ஆகும்.

## வவுனியா இராமபுர ஆசிரியர்கள் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா இராமபுர பாடசாலை ஆசிரியர்கள் பலர் நகரப் பகுதி பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வருவதை அடுத்து இராமப் புறப்பாடசாலை அதிபர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

வவுனியா கல்வித்திணைக்கள அதிகாரிகளின் நடவடிக்கைகளினாலேயே இந்த ஆசிரியர் இடமாற்றம் இடம் பெறுவதாகவும், இதன் காரணமாக கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் விடயமறிந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது. (தி)

## இசை, நடன நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைக் கழகம் கவின் கலைமன்றம் அளிக்கும் இசை, நடன நிகழ்ச்சி எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

## பாலஸ்தீனியருடன் பேசத் தயார்; யாசிர் அரபாத் கலந்து கொள்ளக் கூடாது

### — இஸ்ரேல் நிபந்தனை

(டெல்அவிவ்)

ஆக்கிரமிப்பிற்குள்ளாகியுள்ள அரபுப் பிரதேசங்களின் எதிர்காலம் குறித்து பாலஸ்தீனியக் குழுக்களுடன் பேச்சு நடாத்துவதற்கு தாம் தயார் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஆனால் இப் பேச்சுவார்த்தைகளில் பி. எல். ஓ வின் தலைவர் யாசீர் அரபாத் கலந்து கொள்ளக் கூடாது என்னும் முன்நிபந்தனையை இஸ்ரேல் விதித்துள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசீர் அரபாத் சில நிபந்தனை ஏற்றுக்கொண்டால் இஸ்ரேலுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என பிரெஞ்சுப் பத்திரிகைக்கு அளித்த பேட்டிக்குப் பதில் அளிக்கும் முகமாகவே இஸ்ரேல் இவ்வாறு அறிவித்துள்ளது.

## கொழும்பு மகசீன் சிறையில் 292 தமிழர்களும் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் 292 தமிழர்களும் 17 முஸ்லீம்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளுக்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்களில் பல குடும்பஸ்தர்களும் அடங்குவர். இவர்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோர் பத்துமாத காலத்துக்கும் அதிகமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விசாரணை செய்து விடுவிப்பதில் தேவையற்ற காலதாமதம் காட்டப்படுவதாகத் தெரிகிறது.

தற்போதைய போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இவர்களது எதிராளிகளினால் பாதுகாப்புப் படையினருக்கு தெரிவிக்கப்பட்ட தகவல்களை அடுத்தே இவர்கள் கைதானதாகத் தெரிகிறது. இவர்களுக்கான அடிப்படை வசதிகளும் சீரானதாக இல்லை அத்துடன் இவர்களது மனைவி, பெற்றோரிடமிருந்து இவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இவர்களுக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லை. பத்துக் கடிதங்களுக்கு ஒன்றே இவர்கள் கையில் கிடைப்பதாகத் தெரிகிறது.

## பிரியாந்தி முதலாம் இடம்

1991ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆம் திகதி யாழ் / இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யா. / கோட்டக் கல்விப் பிரிவு தமிழ் மொழித் தினவிழாவில, யா / கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவி செல்வி அ. பு. பிரியாந்தி முதலாம் பிரிவுப் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தையும், செல்வன் ம. பிரபாகரன், இரண்டாம் பிரிவில் பாஓதல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். செல்வி அ. பு. பிரியாந்தி மாவட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கடந்த பதின் மூன்றாம் திகதி யா. / புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருமறைக் கலாமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேர்பாவணி வினா - விடைப் போட்டியில் யா. / கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவர் குழு இரண்டாம் இடத்தைப் பெற்றது.

## இளவாலையில் 6ஆம் கிழமை விழா

தவக்கால ஆறாம் கிழமை வியாகுலமாதா திருவிழா இம் முறையும் இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. 17 ஆம் திகதி ஞாயிறு முதல் மாலை 4.30 மணிக்கு தினமும் தவக்கால ஞான ஒடுக்கம் நடைபெற்று வருகிறது. 21 ஆம் திகதி வியாழன் மாலை 4.30 மணிக்கு வியாகுல மாதா திருச்சுரூப ஆசீரும் சுரூப பவனியும் இடம்பெறும். 22 ஆம் திகதி வெள்ளி காலை வியாகுல மாதா திருநாட் கூட்டுத் திருப்பலியும் மாலை திருச் சிலுவைப் பாதையும் இடம் பெறும் என்று பங்குத் தந்தை அருட்திரு பீற்றர் துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

## பயிற்சியின் போது மரணம்

பயிற்சியின் போது மயங்கி வீழ்ந்த இராணுவ வீரர் உயிரிழந்துள்ளார். பனாகொடை இராணுவ முகாமிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. கலகெதரவைச் சேர்ந்த குணரத்ன என்ற இராணுவ வீரரே இவ்வாறு மரணமடைந்தவராவர்.

## பாலர் பாடசாலை அபிவிருத்திக் கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ் - மாவட்டத்தில் உள்ள சகல பாலர் பாடசாலைச் சேவையினை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக 31 ஆந் திகதி (31-03-91) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் (ஆண்கள்) கருத்தரங்கொன்றினை நடாத்த யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா உத்தேசித்துள்ளார்.

தத்தமது பகுதியில் நடாத்தப்படும் அனைத்து பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இக்கருத்தரங்கு சம்பந்தமான சுற்று நிருபம் மாநகர சபை ஆணையாளர், செயலாளர், நகரசபைகள், விசேட ஆணையாளர், பிரதேசசபை ஆகியனவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகத் தங்கள் பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றம், சனசமூக நிலையம், தனியார், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றினால் நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலைகளுக்கு கருத்தரங்கு பற்றிய அறிவித்தலை உடன் வழங்கும்படி அவர் கேட்டுள்ளார்.

இக்கருத்தரங்கு மாலை வரை தொடர்ந்து நடைபெறுமென்பதுடன் மதிய உணவு வசதிகளைப் பங்குபற்றுபவர்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ் இந்து மகளிர் கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்கான, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (23. 03 1991) காலை 9. 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்கும்படி பாடசாலை அதிபர் திருமதி தி. நாகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## யானைகள் அட்டகாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொது மக்கள் வாழும் பகுதிகளுக்குள் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் புரிந்து வருகின்றன.

கண்டாவளை, பிரமந்தனாறு, புளியம் பொக்கணை ஆகிய பகுதிகளில் இந்த யானைகள் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இப்பகுதிகளில் இது வரை 40 வீடுகளையும் 10 நெற்சூடுகளையும் இந்த யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

## யாழ். வந்த லொறி வவுனியாவில் தடுத்து வைப்பு

கொழும்பிலிருந்து வந்த லொறியொன்றினை சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்துவைத்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் தடைமுகாம் பகுதியில் மேற்படி லொறி தடுத்துவைக்கப்பட்ட போதிலும், இந்த லொறியைச் செலுத்தி வந்த சாரதியும், கிளீனரும் தப்பி தலைமறைவாகிவிட்டனர் என்று அறியப்படுகிறது.

நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த எஸ். பி. அன்ரன் என்பவருடைய லொறியே இவ்வாறு இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது (தி)

## யாழ். மருத்துவமனைக்கு புதிய எக்ஸ்றே கருவி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவ மனைக்கு புதிய மருத்துவ உபகரணங்கள் சிலவற்றை போதனா வைத்திய சாலைகள் அமைச்சு வழங்கியுள்ளது.

புதிய எக்ஸ்கதிர் இயந்திரம் ஒன்றும் இரண்டு பற்சிகிச்சைக்குரிய கூட்டு உபகரணத் தொகுதிகள் ஆகியவையே வழங்கப்பட்டிருக்கின்றன. இவை மிக விரைவில் கப்பல் மூலம் இம் மருத்துவ மனைக்கு எடுத்துவரப்படவிருக்கின்றன.

யாழ். இந்துவில் மாணவர்

# தலைவர் தெரிவில் ஒழுங்கீனம்; மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(நல்லூர்)

தேசிய பாடசாலைகளில் ஒன்றான யாழ். இந்துக்கல்லூரியின் மாணவர்கள் நேற்று முதல் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகிறார்கள் வரவு இடாப்பின்படி க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்கள் (ஏ. எல்) கலை, வர்த்தகம், விஞ்ஞான வகுப்புகளில் 663 மாணவர்கள் உள்ளார்கள். இவர்களே வகுப்புகளைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்துள்ளார்கள்.

மாணவர் தலைவர்கள் தெரிவு தொடர்பாக கல்லூரி நிர்வாகத்திற்கும், உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவருக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடே வகுப்புகளைப் பகிஷ்கரிப்பதற்கானகாரணமாகும். மொத்தம் 30 மாணவர் தலைவர்களைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக 27 மாணவர் தலைவர்களைத் தேர்வுக்குப் பொறுப்பாக இருந்தஆசிரியர் தேர்வுக்குழு தெரிவு செய்துள்ளது என்று மாணவர் தரப்பில் சொல்லப்படுகின்றது. நிர்வாகத்திற்குப் பிடிக்காத மாணவர் ஒருவரைத் தள்ளி வைப்பதற்காகவே இந்த 30 எண்ணிக்கை திடீரென்று 27 ஆக மாறியதாம். ஆசிரியர் ஒருவர் தமது சுய அதிகாரத்தைப் பாவித்துத்தான் இந்தக் கைங்கரியத்தைச் செய்ததாகமாணவர் தரப்பிலும், வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் 11 1/3 புள்ளிகளைப் பெற்ற தால் மாணவர் பெயர் நிராகரிக்கப்பட்டதாகவும் அதிபர் தரப்பிலும் சொல்லப்படுகின்றது. இது இப்படியிருக்க 11 1/3 புள்ளிகளை எடுத்த இன்னொருவர் மாணவர் தலைவராகத் தெரிவுபட்டிருக்கிறாரே, அது எப்படிஎன்று வகுப்புகளைப் பகிஷ்கரித்து விளையாட்டு மைதானத்தில் கூடி நிற்கும் மாணவர்கள் கேட்கிறார்கள்.

மாணவர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டதில் முறைகேடு இருப்பதாக மாணவர்கள் அதிபரிடம், உயர்தர வகுப்பு மாணவர் தலைவர் ஊடாக அதிருப்தி மனு கொடுத்தார்கள். மனுவைச் சமர்ப்பிக்க ஒன்றியத் தலைவரே நேற்றுமுதல் முதல் பாடசாலையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளார். இவரை ஆதரித்து மாணவ தலைவர்கள் 27 பேரும், ஒன்றியம் மற்றும் ஏ. எல். மாணவர்களும் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

வெளிநடப்புச்செய்த மாணவர்கள் நேற்றுக்காலை மறுபடியும் மனு ஒன்றைச் சமர்ப்பித்தனர் அதனைக் கல்லூரி நிர்வாகம்நிராகரித்துவிட்டது.

இன்று காலையில் இந்து மகளிர் கல்லூரியில் யாழ். இந்து ஏ. எல். மாணவர் பங்கு பற்ற இருந்த சோல் லாடல் நிகழ்ச்சியிலும் மாணவர்கள் பங்குபற்ற முடியாமல் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றுக் காலையில் மாணவர்கள் வகுப்பைப் பகிஷ்கரித்து வெளியேறியபோது யாழ். நகர் மத்தியிலுள்ள பிரபல்யமான மற்றொரு கல்லூரி ஏ. எல். மாணவர்கள் துணை நின்றதால் இந்தக்காரியம் நிறைவேறியது என்றும் மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கச்சான காரண காரியம் பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதென்றும் யாழ் இந்துக் கல்லூரி அதிபர் குகதாசன் எமது செய்தியாளரிடம் கைவிரித்தார்.

நேற்றுப் பிற்பகல் நலன் விரும்பிகள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளும் கைகூடவில்லை. கல்லூரி அதிபர் சமரச முயற்சிகளைக் கொள்கையளவில் கூட ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டாராம்.

யார்பக்கம்நியாயம் என்பது கேள்விக்குறியாகவேஉள்ளது.

## மனிதமுகத்துடன் ஆட்டுக்குட்டி

(செ. த. மை.)

அச்சுவேலி-இடைக்காட்டில் ஓர் ஆடு ஈன்ற இருகுட்டிகளில் ஒன்று மனித முகம் கொண்டதாக இருக்கிறது. இந்தக் குட்டியானது, தாயாட்டின் பால் குடிக்கமுடியாமல் கஷ்டப்படுகிறது. வீட்டுக்காரர் குளுக்கோஸ், கரைத்து ஊட்டி வருகின்றனர். இக்கடாக்குட்டியை பெருந்தொகையான மக்கள் பார்த்துச் செல்லுகின்றார்கள்.

ரஞ்சனின்

உதவும்வகையில் தகவல்களை கொடுத்துதவுமாறு பொது மக்களை வேண்டுவதோடு, தகவல் கொடுப்போரின் விபரங்கள் எச்சந்தர்ப்பத்திலும் வெளியிடப்படாத வகையில் மிகவும் அவதானமாகப் பாதுகாக்கப்படும் எனவும் உறுதி கூறியுள்ளனர்.

இதேவேளை இக்குண்டு வெடிப்பில் பங்களித்தசந்தேக நபர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியில் டி. ஐ ஜி உடுகம்பொல தலைமையிலான பொலிஸ்பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். இதன்பிரகாரம் சந்தேகத்தின்பேரில் டாக்டர்கள் வழக்கறிஞர்கள் உட்பட பலரைக் கைது செய்துள்ளனர்.

டி. ஐ ஜி உடுகம்பொல தென்னிலங்கையில் ஏற்பட்ட ஜே. வி. பி கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த தீவிரமாகச்செயற்பட்டு அரசாங்கத்தினின் பாராட்டைப்பெற்றவராவார். வடமேற்கு மாகாணத்திலும், மத்தியமாகாணத்திலும் டி. ஐ ஜி உடுகம்பொல தலைமையிலான பொலிஸ் கோஷ்டி ஜே. வி. பியினர்மீது தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஓய்வு பெற்ற

திபோகஸ்தரை வேலைக்கு அமர்த்தலாம். தொழில் ரீதியான திறமை, தேசிய முகாமைத்துவ திறமை, தொழில் நுட்பவியல் துறைகளைச் சார்ந்தவர்கள் ஆங்கில, கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் விஷேட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மட்டுமே மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படலாம் என சுற்றுநிருபத்தில் பொது நிர்வாக, மாகாண சபை அமைச்சர் பெஸ்டர் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும் ஓய்வுபெற்ற ஊழியர்கள் முன்னர் வகித்த பதவிக்கு அல்லாது எக்காரணம் கொண்டும் வேறு பதவிக்கு அமர்த்தப்படமாட்டார்கள். முன்னர் எடுத்த சம்பளத்தை விட கூட்டியும் கொடுக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அழிவுகளை

சேர்ந்ததாகத் தெரிவிக்கிறார்.

கடந்த 16 ஆம் திகதி புத்தூர் மெதடிஸ்த திருச்சபையினர் ஏற்பாடு செய்திருந்த மாநாடொன்றில் செல்வி மிக்ஸ் கலந்துகொண்டுபோர்க்கால நிகழ்வுகளைக் கேட்டு அறிந்தார்.

"தமிழ் இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள வலுமிக்க தமிழீழப்பற்றை எந்தச் சக்தியாலும் உடைத்தெறிய முடியாதென்பதை தான் உணர்ந்து கொண்டதாகவும், இங்குதாம் மேற்கொண்டு தயாரித்தமதிப்பீட்டறிக்கையை உலக மெதடிஸ்த திருச்சபையில் சமர்ப்பிக்கப்போவதாகவும் செல்வி டொறத்திமிக்ஸ் நமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

முத்தமிழ்

இவ்விழா நடைபெறும். இவ்விழாவில் பல கலை அரங்குகளும் இடம்பெறவுள்ளன. மேலும் இவ்விழாவை முன்னிட்டு மலர் ஒன்றும் வெளிவர இருக்கின்றது என்பதுடன் தமிழ் தேசியவிருதுகளும்வழங்கப்படவுள்ளன.

மேலும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் இவ்வைபவத்தில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இவ்விழாவிற்கு வருவோருக்கும் பொதுமக்களுக்கு வேண்டிய சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனஸ் நல்லடக்கம்

அண்மையிரவு சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த அனஸ் என்றபோராளியின் புகழுடல் புலியம் பொக்களையில் இருந்து இராணுவ மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு கடந்த 17 ஆம் திகதி மாவீரர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஐந்து படை

இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட இராணுவத்தினரது உடல்களையும், ரி. 56 ரக துப்பாக்கிகள்-2, மகசின்-8, நடுத்தர ரவைகள்-285 என்பவற்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். மேற்படி ஏற்பட்ட இழப்புக்களைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கி தமது காவலரணுக்குச் சென்றனர்.

அதேவேளை நேற்றுக்காலை 7-20 மணியளவில் காண்டிக்குளம் காவல் அரணில் இருந்து வெளியேறிவந்த புளொட் குழுவினர் சுமார் 75யார் முன்னேறும்போது மிதிவெடியில் சிக்கியதில் இருவர் தமது கால்களை இழந்தனர்.

திருமலையில்

திருக்கோணமலை மாவட்டத்தில் இரணைக்கேணி என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், அவர்களுடைய ஆயுதங்களையும், வேறு சிலவற்றையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றிக்கொண்டனர். சலப்பையாறு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேறிவந்த இராணுவ அணி ஒன்று குச்சவெளிப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் மேற்படி இராணுவ அணியினரை இரணைக்கேணி என்ற இடத்தில்வைத்து வழிமறித்துத் தாக்குதல் தொடுத்தனர். இந்தத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இராணுவத்தினரிடமிருந்து ரி. 56 பட் மொடல் துப்பாக்கி-2, மகசின்-8, ஏ. கே. எல். எம். ஜி. ரம் மகசின்-4, ரவைகளுடன் இணைந்த லிங்-400, நடுத்தர ரவைகள்-1170 என்பனவற்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றிக்கொண்டனர்.

## செஞ்சிலுவைத் தேர்தலில் தில்லுமுல்லுக்கு ஏற்பாடு?

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் விரைவில் நடைபெற விருக்கும்தேர்தலில் பல தில்லுமுல்லுகள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என செஞ்சிலுவைச் சங்க உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் அண்மைக் காலத்தில் அங்கத்துவ அட்டைகள் தாராளமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்கத்துவ அட்டைகளைப் பெற்றவர்களில்பலர் கொழும்பிற்குச்சென்றுவிட்டனர். இதனால் கொழும்பு சென்றவர்களின் பெயரில் வாக்களிக்கும் ஏற்பாடுகள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்றும் கூறப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்க வாக்கெடுப்பின்போது தேசிய அடையாள அட்டை கோரப்படும் மரபு இல்லை என்பதைச் சாதகமாக வைத்துப் பல தில்லுமுல்லுகளைச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்தன.

## வரிசையில் நின்றபோது முதுகில் வீழ்ந்த சூடு

(யாழ்ப்பாணம்)

எஸ் வசந்தகுமாரி (வயது 35) என்ற பெண்மணி வவுனியா செல்வதற்காக நெச்சிமோட்டையில் வரிசையில் நின்றபோது துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்தார்.

குழமுனையைச் சேர்ந்த இவர் வவுனியாவில் பொருள்களை வாங்கி வியாபாரம் செய்யும் தொழிலைக்கொண்டவர். எங்கோ திடீரென வெடிச்சத்தம் கேட்க ஆரம்பித்தது. அனைத்து பொதுமக்களும் சிதறி ஓடினர். அந்தவேளையில் முதுகில் வெடிபட்டு நிலத்தில் வீழ்ந்தார். அருகே ஓடிய சிலர் இவரைப் பொறுப்பேற்றனராம். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததாக அந்தப் பெண்மணியே கூறினார். (சு) (சேர)

## சுன்னாக வங்கியில் நிவாரணக் கொடுப்பனவு

(சுன்னாகம்)

மீளக் குடியமர்த்தல் 2ஆம் கட்ட நிவாரணம் ரூபா1000 உற்பத்தித்திறன் முயற்சி நன்கொடை ரூபா 4000 ஆகியவற்றை இதுவரை எடுக்காத வறியஉரும்பராய், குப்பிளான் சுன்னாகம், புன்னாலைக் கட்டுவன், ஏழாலை, தாவடி, கூடுவில் சங்குவேலி இணுவில் கந்தரோடை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் இக் கொடுப்பனவு வழங்கப்படும் கொடுப்பனவுக்குரியவர்கள் குடும்பப்பதிவு அட்டை, கிராமசேவையாளர் வழங்கிய கொடுப்பனவு அட்டை தேசிய அடையாள அட்டை, ரூபா 2. பெறுமதியான முத்திரை என்பவற்றுடன் வங்கி வேலை நேரத்தில் சமூகம் தந்து கொடுப்பனவை பெறும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கொர்பசேவ் யோசனைக்கு சோவியத்தில் ஆதரவு

(மாஸ்கோ)

சோவியத்யூனியன் கட்டமைப்பைப் புதுப்பிப்பதற்குச் சோவியத் அதிபர் கொர்பசேவ் முன்வைத்த யோசனை பற்றி சென்ற ஞாயிறன்று இடம்பெற்ற கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 75 சதவிகித வாக்காளர்களின் ஆதரவு கிடைத்துள்ளது.

மொத்த வாக்காளர்களில் 82 2 விகிதமானோர் வாக்களிப்பில் கலந்துகொண்டதாகவும், 77 சதவிகித வாக்காளர்கள் திரு. கொர்பசேவின் யோசனைக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் சோவியத் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்த நிறுத்த நகல் ஐ. நா. பாதுகாப்புச்சபையில்

(வாஷிங்டன்)

வளைகுடாவில் நிரந்தர யுத்தநிறுத்தத்தை மேற்கொள்வதற்காக கடும் நிபந்தனைகளைக் கொண்ட நகல் தீர்மானத்தை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை ஆராயவுள்ளது. அத்துடன் இரசாயன ஆயுதங்கள் பற்றியபுதிய நிபந்தனைகளும் இதில் அடங்குகின்றன.

நாளை வியாழக்கிழமைமக்கு முன்னதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை முழுஅளவில் கூடுமென ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

## ஆயுதங்களை வைத்திருந்ததாக எர்ஷாத் மீது குற்றச்சாட்டு

உத்தியோக பூர்வ இல்லத்தில் ஆயுதங்கள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் விசேட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிமன்றத்தைச் சுற்றி பலத்த காவல் போடப்பட்ட நிலையில், முன்னாள் ஜனாதிபதி பொலிஸாரால் நீதி மன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார். மாவட்ட நீதிபதி ஒருவரால் தலைமை தாங்கப்படும் விசேட நீதிமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத்விசாரிக்கப்படவுள்ளார்.

## ஒன்று கூடல்

வலிகாமம் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் இன்று மாலை நான்கு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில்நடைபெறவுள்ளது

அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## வந்தன

நேற்று யாழ். செயலகத்திற்கு ஒப்புதிய வவுச்சர்கள் வந்துசேர்ந்துவிட்டன. இந்த வவுச்சர்கள் காலக்கிரமத்தில் அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.